இனிமையான குழந்தைகளே! பதவியின் ஆதாரம் படிப்பை பொறுத்தது ஆகும். படித்து பின் படிப்பிக்க வேண்டும். தெருத் தெருவாகத் சென்று தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள் எந்த விருப்பத்திற்கு அப்பாற்பட்டு இருந்து சேவையில் ஈடுபட்டிருக்க வேண்டும்?

பதில்: .:- நீங்கள் கருணையுள்ளம் கொண்ட குழந்தைகள் ஆவீர்கள். நீங்கள் யாரிடமும் பைசா பெறும் விருப்பம் கொள்ளக்கூடாது. இந்த விருப்பத்திற்கு அப்பாற்பட்டு தானம் செய்யும் சேவை யில், மற்றவர்களை தனக்குச் சமமாக ஆக்குவதில் ஈடுபட்டு இருக்க வேண்டும். யாருடைய பாக்கியத்தில் இருக்குமோ அவர்கள் அவசியம் விதை விதைப்பார்கள் என்பது புத்தியில் இருக்கட்டும். யாராவது பேச்சின் மூலம் அல்லது கர்மத்தின் மூலம் சேவை செய்ய முடிய வில்லை என்றால் செல்வத்தின் மூலமாகக் கூட சகயோகி ஆகிறார்கள். ஏழைக் குழந்தைகளோ ஒரு பிடி அரிசி அளித்து அரண்மனையைப் பெற்றுக்கொண்டு விடுகிறார்கள்.

பாடல்: அன்பரே வந்து சந்தியுங்கள்....ஓம்சாந்தி

அன்பிற்குரியவர்களுக்கு ஒரேயொரு அழைப்பு போதுமானது. இவ்வாறு யார் கூப்பிட்டது மற்றும் யாரைக் கூப்பிட்டார்கள்? இதுவோ குழந்தைகளாகிய நீங்கள் மட்டும் அறிந்துள்ளீர்கள். ஏனெனில் நீங்கள் தந்தை மூலமாக தந்தையை அறிந்துள்ளீர்கள். தந்தை மகனை வெளிப்படுத்து வார், பின் மகன் தந்தையை வெளிப்படுத்துவான். இப்படி நியமம் உள்ளது. இப்பொழுது அன்பிற்குரியவர்கள் (பிரியதர்ஷினிகள்) அனைவரும் அன்பரை (பிரியதர்ஷன்) அழைக்கிறார்கள். பாடலோ கிருஷ்ணருக்காகப் பாடப்பட்டுள்ளது. அனைவருக்கும் கிருஷ்ணருடன் அன்பு இருக்கவே இருக்கிறது. கிருஷ்ணர் இராஜயோகம் கற்பித்திருந்தார் என்று கிருஷ்ணரின் பக்தர்கள் கருது கிறார்கள். உண்மையில் அனைவரின் அன்பர் ஒரேயொருவர் ஆவார். அனைத்து பதீதர்களையும் பாவனமாக ஆக்குபவர் ஒரேயொருவர் ஆவார். நிராகாராக இருப்பவரைத்தான் நினைவு செய்கிறார்கள். ஆனால் பரமபிதா பரமாத்மாவை பின் சரியான முறையில் அறியாமல் இருக் கிறார்கள். நிராகார் என்பதன் சரியான பொருளைத் தெரியாமல் இருக்கிறார்கள். உண்மையில் ஒரேயொரு இராம் ஆவார் என்று தந்தை விளக்கியுள்ளார். ஹே! பிரபு ஹே! ஈஸ்வர், ஓ காட்.... என்று ஒருவரைத் தான் அழைக்கிறார்கள். எந்தவொரு ஸ்தூல மனிதனையோ தேவதையையோ கூப்பிடுவதில்லை. புத்தி நிராகார் பக்கம் சென்று விடுகிறது. காட்ஃபாதர் அனைவருக்கும் ஒரே யொருவர் ஆவார். நாங்கள் சகோதரர்கள் ஆவோம் என்று கூட கருதுகிறார்கள். ஆனால் ஆத்மாக் களின் ரூபத்தில் தான் சகோதரர்கள் ஆவார்கள். ஏனெனில் ஒவ்வொருவரும் தத்தம் தர்மத்தினு டையவராக இருக்கிறார்கள். ஒரே தர்மத்தின் சகோதர சகோதரிகள் கூட சண்டையிட்டுக் கொண்டே இருக்கிறார்கள். எல்லோரும் துக்கமாகி விடும்பொழுது தந்தை கூறுகிறார், என்னை நினைவு செய்யுங்கள். ஏனெனில் நான் தான் அனைவரின் பதீதபாவனன் ஆவேன். அனைத்து அன்பிற்குரியவர்களுக்கும் அன்பரோ ஒரேயொருவர் ஆவார். நாயகி நாயகனை நினைவு செய்கிறார். அன்பிற்குரியவர்கள் அன்பரே! வந்து சந்தியும் என்று

நினைவு செய்கிறார்கள். ஆத்மா நினைவு செய்து கொண்டிருக்கிறது. ஜீவன் கூப்பிடுகிறது. கூப்பிடுவதோ ஆத்மா ஆகும் அல்லவா! சரீரம் அல்ல. ஜீவாத்மா ஜீவாத்மாவிடம் பேசுகிறது. உலகத்தில் மனிதர்களோ தேக அபிமானி ஆன காரணத்தால் தங்களை சரீரம் என கருதுகிறார்கள். ஜீவனுடைய ஆத்மா கூப்பிடுகிறது என்பதை குழந்தைகளாகிய நீங்கள் மிகவும் உறுதியாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஆத்மா அன்பு செய்கிறது சரீரம் சரீரத்தை அன்பு செய்வதில்லை. ஆத்மா சரீரத்தை அன்பு செய்வதில்லை. ஆத்மா சரீரத்தை தாரணை செய்கிறது. இச்சமயத்தில் அன்பு கூட அசுத்தமானது. தேவி தேவதை களின் அன்போ மிகவும் தூய்மையானதாக இருக்கும் அல்லவா! அன்பு விகாரத்தினுடையதாகத் தான் இருக்கும் என்று மனிதர்கள் நினைக்கிறார்கள். ஆனால் சத்யுகத்தில் அன்பு இருக்கும் ஆனால் அங்கு எந்தவொரு விகாரமும் இருக்காது. தந்தை குழந்தைகளாகிய உங்களை 21 பிறவி களுக்கு இந்த விகாரங்களிலிருந்து காப்பாற்றுகிறார். நீங்கள் இந்த விஷயங்களை எவரொரு வருக்கும் அமர்ந்து விளக்கினீர்கள் என்றால் கேட்டு மிகவும் மகிழ்ச்சி அடைவார்கள். பாபா சேவை செய்வதில்லை என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால் சேவைக்கான வழிகளோ நிறைய கூறுகிறார். இப்பொழுது தசரா வருகிறது, எல்லா இடங்களிலும் தேவிகளின் பூஜை கூட நடக்கிறது. எனவே அங்கும் சென்று புரிய வைக்க வேண்டும். தந்தையின் அறிமுகம் கொடுக்க வேண்டும். அவர் பரமபிதா பரமாத்மா நிராகார தந்தை ஆவார். ஆத்மாக்களாகிய நாமும் மூலவதனத்தில் இருக் கிறோம். வீடுகூட வதனம் என்று கூறப்படுகிறது. ஆத்மாக்களாகிய நமது தந்தை கூட அங்கு பரந்தாமத்தில் இருக்கிறார். தந்தை குழந்தைகளை அனுப்பி விடுகிறார். இதுவும் நாடகப்படி தானாகவே நடந்து கொண்டே இருக்கிறது. அவரும் தனது குறித்த நேரத்தில் வரவேண்டி யுள்ளது. ஒருவர் தந்தை ஆவார் மற்ற அனைவரும் ஆத்மாக்கள் ஆவார்கள். இது மனித சிருஷ்டி ஆகும். அதில் தெய்வீக குணமுடைய மனிதர்களாக இலட்சுமி நாராயணர் சத்யுகத்தில் இருந்தார்கள், மற்றபடி 8-10 புஜங்களுடைய மனிதர்கள் இருப்பதில்லை. இவர்கள் எங்கிருந்து வந்தார்கள்? பூஜை நடக்கும் இடத்திற்கு சென்று மிகவும் அப்பாவியாக இது என்ன என்று கேட்க வேண்டும். ருத்ர யக்ஞம் கூட நிறைய நடக்கின்றன. பணக்காரர்கள் யக்ஞம் ஆகியவை நிறைய செய்வித்து கொண்டே இருப்பார்கள். நீங்கள் எங்கு வேண்டு மானாலும் சுற்றி வரலாம். நீங்கள் உலாவும் யோகி ஆவீர்கள். யார் எந்தெந்த தேசத்தில் இருக்கிறார்களோ அங்கு சேவை செய்ய முடியும். இவர்கள் யார் எதற்காக இவர்களுக்கு பூஜை ஆகிறது? என்ன செய்து விட்டு சென்றுள்ளார்கள்? இவர்கள் யாருடைய குழந்தைகள் ஆவார்கள்? என்றெல்லாம் அமர்ந்து கேட்க வேண்டும். பிறகு புரிய வைக்க வேண்டும். ஏனெனில் நீங்கள் அனைவருக்கும் நன்மை செய்ய வேண்டும், கருணையுள்ளம் உடையவர் ஆக வேண்டும். வீணாக பைசாவை அழித்துக் கொண்டே இருக்கிறார்கள்.

குழந்தைகளுக்கு சேவையோ நிறைய உள்ளது. இப்பொழுது தசரா வருகிறது. அது பற்றி விளக்க வேண்டும். இராவணனை ஏன் எரிக்கிறார்கள்? இராவணனுடைய இராஜ்யம் எப்பொழுது முதல் எப்பொழுது வரை நடந்தது. பின் விஷ்ணுவின் இராஜ்யம் எவ்வளவு காலம் நடந்தது? இது பிரம்மாவின் பகல் ஆகும். இது பிரம்மாவின் இரவு ஆகும் என்று அரசாங்கத்திற்கு போய் புரிய வைக்க வேண்டும். உண்மையில் இப்பொழுது இராவண இராஜ்யம் ஆகும் அல்லவா? அது விஷ்ணு சம்பிரதாயம் அல்லது தெய்வீக சம்பிரதாயம் இது அசுர

சம்பிரதாயம் ஆகும். பெரிய பெரியவர் களுக்குப் போய் புரிய வைக்க வேண்டும், படங்களை எடுத்துச் செல்ல வேண்டும். பெயர் புகழடைந்து விடும் வகையில் அப்பேர்ப்பட்ட அம்பு எய்திட வேண்டும் என்ற முயற்சி செய்ய வேண்டும். காசியில் சரஸ்வதி போன்ற மிகப் பெரும் பெரும் பட்டங்கள் கிடைக்கின்றன. இப்பொழுது சரஸ்வதியோ ஜகதாம்பா ஆவார். பாரதவாசிகள் அனைவரும் ஜகதாம்பாவை உலகத்தை படைப்பவர் என ஏற்றுக் கொள்வார்கள். ஆக பின் அவசியம் தந்தையும் இருப்பார், ஜெகத்பிதா பிரம்மா மற்றும் ஜெகத்மாதா சரஸ்வதி என்று கூறுகிறார்கள் அல்லவா? சரஸ்வதி கூட பிரம்மாவின் மகள் ஆவார், பிரம்மாவின் முகவம்சாவளி ஆவார். பிரம்மாவை பின் படைப்பவர் யார்? சிவ பரமாத்மாய நமஹ என்று பாடப்படுகிறது. அவர்கள் தேவதா நமஹ ஆகி விட்டார்கள். எனவே தேவதைகளின் படைப்பு கர்த்தா அவர் சிவ பரமாத்மா ஆகி விட்டார். அவரிடமிருந்து ஆஸ்தி கிடைத்திருக்க வேண்டும். எனவே குழந்தைகளாகிய நீங்கள் புரிய வைப்பதற்காக வெளியே செல்ல வேண்டும் அல்லவா! யாரெல்லாம் நல்ல அறிவுள்ளவர்களோ அவர்கள் சேவை செய்ய வேண்டு:ம. தந்தையோ தெருத் தெருவாகச் செல்ல மாட்டார். இது குழந்தைகளின் வேலை ஆகும். சேவை செய்யவில்லை என்றால் சேவை செய்யக்கூடியவர் (சர்விசபிள்) இல்லை என்று நினைப்பார். பின் பதவியும் அவ்வாறே அடைவார்கள்.. குழந்தைகளோ ஆகி இருக்கிறார்கள் தான் ஆனால் எல்லாமே படிப்பைப் பொறுத்தது ஆகும். யார் அதிகமாக படிப்பார்களோ அவர்கள் உயர்ந்த பதவி அடைவார்கள் படித்தவர்களுக்கு முன்னால் படிக்காதவர்கள் மூட்டை தூக்குவார்கள். உயர்ந்த பதவி அடைவதற்கான முயற்சி செய்ய வேண்டும். இது சிவபாபா நேரிடையாக புரிய வைத்துக் கொண்டிருக்கிறார் வெளியில் இருக்கும் குழந்தைகள் கூட சிவபாபா மதுபனில் முரளி நடத்திக் கொண்டிருப்பார் என்று புரிந்திருப்பார்கள். முரளி வரவில்லை என்றால் குழந்தைகள் துன்பப்பட்டு விடுகிறார்கள். சிவபாபாவின் முரளி ஏன் வரவில்லை என்று யோசிக்கிறார்கள். ஏனெனில் சிவபாபாவின் முரளி மூலமாகத்தான் நமது பிறவி, வைரம் போல ஆக வேண்டியுள்ளது. முரளியோ தினமும் கேட்க வேண்டும். 7 நாட்களின் முரளி கூட ஒருவரிடம் வருகிறது, அதை அமர்ந்து அவர் படித்தார் என்றால் எவ்வளவு குஷி கிடைத்து விடும். அவசியம் படிக்க வேண்டும். எந்தவொரு முடமானவரோ, நொண்டியோ, ஊமையோ கூட இதைப் படிக்க முடியும். அப்பேர்ப்பட்ட காய்ச்சல், வியாதி இருந்தாலும் கூட முரளி அவசியம் படிக்க வேண்டும். நீங்கள் இவ்வளவு கூறினால் போதும் - உங்களுக்கு இரண்டு தந்தைகள் உள்ளார்கள் ஆக யாருக்கு ஆஸ்தி எடுக்க வேண்டியுள்ளதோ அவர் அதே நேரத்தில் இந்த இரண்டு வார்த்தைகள் மூலமாகக்கூட புரிந்து கொண்டு விடுவார். இந்த ஞானம் அவ்வளவு சுலபமானது ஆகும். தந்தையை நினைவு செய்வதால் முழு சக்கரமும் புத்தியில் வந்து விடுகிறது. எந்த அளவு புத்தியில் சக்கரம் சுற்றுவீர்களோ அந்த அளவு சக்கரவர்த்தி ஆவீர்கள். தந்தை கூறுகிறார் யார் எனது பக்தர்களோ அல்லது இலட்சுமி நாராயணர் ஆகியோரை ஏற்றுக் கொள்பவர்களோ அவர்களுக்கு இவ்வாறு புரிய வையுங்கள் - நீங்கள் தான் தேவி தேவதைகளாக இருந்தீர்கள். 84ன் சக்கரம் சுற்றினீர்கள். இப்பொழுது மீண்டும் தேவதை ஆகுங்கள். இந்த பாபா கூட இலட்சுமி நாராயணரின் பக்தராக இருந்தார் அல்லவா? பூஜாரியிலிருந்து பின் பூஜிக்கத்தக் கவராக ஆகிறார். இலட்சுமி நாராயணன் பூஜிக்கத்தக்கவர் ஆகிறார். இலட்சுமி நாராயணன் பூஜிக்கத்தக்கவர்கள் ஆவார்கள் அல்லவா! நீங்கள் இலட்சுமி நாராயணர்

கோவிலுக்கு சென்றால் கூறுவீர்கள் - நேற்றைக்கு இவர்களுக்கு பூஜை செய்து கொண்டிருந்தோம் இன்றைக்கு நாம் அவர்கள் போல ஆகிக் கொண்டிருக்கிறோம். புரிய வைப்பதோ மிகவும் சுலபம். குழந்தைகளாகிய நீங்கள் கருணையுள்ளம் உடையவர் ஆக வேண்டும். யாருக்கு சேவையில் ஆர்வம் இருக்குமோ அவர் கற்பிக்கும் பிராமணியின் துணையைப் பிடித்துக் கொள்வார். எங்களுக்கு அமர்ந்து புரிய வையுங்கள். நீங்கள் சிவபாபாவின் களஞ்சியத்திலிருந்து சாப்பிடுகிறீர்கள் என்றால் சிவபாபாவின் சேவை செய்ய வேண்டும் அல்லவா! எல்லோரும் சிவபாபாவின் உண்டியலில் போடுகிறார்கள். நாம் சிவபாபாவின் களஞ்சியத்திலிருந்து சாப்பிடுகிறோம் என்று கருதுகிறார்கள். எனவே மனம், சொல், செயல் மூலமாக சேவை செய்ய வேண்டும். இங்கு உங்களுக்கு எவ்வளவு ஆனந்தம் ஏற்படுகிறது. அந்த ஆனந்தம் வீட்டில் ஏற்பட முடியாது. மனசா சேவை கூட செய்ய வேண்டும் நினைவு செய்ய வேண்டும். பவித்திரமாக ஆக வேண்டும். சங்கொலியும் எழுப்ப வேண்டும். உடல் மூலமாக ஏதாவது யக்ஞ சேவை செய்ய வேண்டும். ஆரம்பத்தில் மம்மா பாபா கூட பாத்திரம் தேய்ப்பார்கள். சாணியுருண்டை செய்வார்கள். தேக அபிமானத்தை துண்டிப்பதற்காக எல்லாமே செய்து கொண்டிருந்தார்கள். இப்பொழுது பின் நிறைய பேருக்கு நாளுக்கு நாள் தேக அபிமானம் அதிகரித்துக் கொண்டே போகிறது. யக்ஞத்தில் சாப்பிடுகிறார்கள் என்றால் சேவையும் செய்ய வேண்டும். தந்தையை நினைவு செய்வதால் விகர்மங்கள் விநாசம் ஆகும்? சர்வவியாபி என்று கூறுவதால் விகர்மங்கள் எவ்வாறு விநாசம் ஆகும். சர்வவியாபி என்று கூறுவதால் புத்தியின் யோகம் தந்தையிடம் ஈடுபடவே முடியாது. எனவே இந்த சேவை எல்லோருக்கும் செய்ய வேண்டும் தானம் கொடுக்க வேண்டும். அந்த சேவை இல்லை என்றால் ஸ்தூல சேவை செய்யுங்கள். அதுவும் செய்ய முடியவில்லை என்றால் பணத்தால் சேவை செய்யுங்கள். பின் அதுவும் சேவை ஆகிவிடும். விதை விதைக்கப்படுகிறது என்றால் அதன் பலன் வெளிப்படுகிறது. இங்கு ஒரு பிடி அரிசி கொடுப்பதால் அரண்மனை கிடைத்து விடுகிறது. யாருக்குமே விதை விதையுங்கள் என்று கூறக்கூடாது. பாக்கியத்தில் இல்லை என்றால் ஒருபொழுதும் புத்தியில் வரவே வராது. பணக்காரர்களாக இருந்தால் 5 இலட்சம் கூட இன்ஷுரன்ஸ் செய்வார்கள் ஏழைகளாக இருந்தால் 500க்கு இன்ஷுரன்ஸ் செய்வார்கள். இங்கு பின் ஏழைகள் எல்லோரையும் விட அதிகமாக இன்ஷ்யூர் செய்கிறார்கள். ஏழைகளின் ஒரு பிடி அரிசியும் பணக்காரர்களின் பணத்திற்கு சமமாக ஆகி விடுகிறது. மம்மா பாருங்கள் என்ன இன்ஷ்யூர் செய்தார்? உடல் மனதாலே பாருங்கள் எவ்வளவு சேவை செய்தார்! நிறைய பணம் கொடுப்பவர்களுக்கு கூட அவர்களுக்கு கிடைக்கும் அளவிற்கு பதவி கிடைக்க முடியாது.

நீங்கள் நரனிலிருந்து நாராயணர் ஆகக் கூடியவர்கள் ஆவீர்கள். இந்த ஞானமே சுயராஜ்ய யோகத்தினுடையது. நாம் மம்மா பாபாவை பின்பற்றுகிறோமா என்று ஒவ்வொருவருடைய புத்தியும் புரிந்து கொள்ள முடியும். புருஷார்த்தம் செய்ய வேண்டும் அல்லவா? இந்த ஞானக் கடலோ தெருக்களுக்கு செல்ல மாட்டார். பாபா பொது இடத்தில் சொற்பொழிவும் நிகழ்த்த மாட்டார். தந்தை கூறுகிறார் நானோ குழந்தைகளுக்கு முன்னால் அமர்ந்து சொற்பொழிவு நிகழ்த்துவேன். நான் அனைவரின் தந்தை ஆவேன் நீங்கள் தாய்மார்கள் மற்றும் குமாரிகள் ஆவீர்கள். நீங்கள் சென்று சொற்பொழிவு செய்ய வேண்டும். பிறகும் நீங்கள்

பி.கே. ஆவீர்கள். இப்பொழுது ஜகதாம்பாவிற்கு எவ்வளவு பெரிய திருவிழா நடக்கிறது. ஏதோ சேவை செய்து கொண்டிருக்கிறார் அல்லவா? நீங்கள் கூற முடியும் அங்கு நிறைய சேவை செய்ய முடியும். சர்விசபிள் குழந்தைகள் தாங்களாகவே சேவை செய்து கொண்டே இருப்பார்கள் சொல்லாமல் செய்பவர்களே தேவர்கள். காலையில் செல்லுங்கள் இரவு திரும்பி வாருங்கள். சேவை செய்வதற்கான தைரியம் வேண்டும். நிறைய நல்ல நல்ல குழந்தைகள் உள்ளார்கள். ஆனால் ஏதாவதொரு பந்தனத்தில் உள்ளார்கள். ருத்ர ஞான யக்ஞத்தில் அபலைகள் மீது அநேக விதமான தடைகள் ஏற்படுகின்றன. பிராக்டிக்கலாக பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள். எனவே தந்தையிடமிருந்து ஆஸ்தி பெற வேண்டும் என்றால் சேவையில் மூழ்கி இருக்க வேண்டும். ஸ்ரீமத்படி நடங்கள். லௌகீக தாய் தந்தையர் ஆகியோர் உள்ளார்கள் என்றால் அவர்களுக்கு சேவையும் செய்ய வேண்டும். கூடவே இந்த சேவையும் செய்ய வேண்டும். மும்பையில் கூட அம்பாவின் கோவிலுக்கு அநேகர் செல்கிறார்கள். அங்கும் போய் நீங்கள் சேவை செய்ய முடியும். ஆம், யார் இதுபோல சேவை செய்கிறார்களோ அவர்களுக்கு கவர்ன்மென்ட் கூட சரீர நிர்வாகத் திற்காக கொடுப்பதற்கு தயாராக உள்ளது. ஒன்றுமே புரிந்து கொள்பவர்களாக இல்லை என்றாலும் கூட பிறகும் முயற்சி செய்யுங்கள். யாராவது ஒருவர் அல்லது ஒருவர் வெளிப்படுவார். நிறைய சர்ஜன்கள் தேவை. நீங்கள் குருடர்களுக்கு கைத்தடி ஆவீர்கள். குழந்தைகளாகிய உங்களுக்கு சேவையோ ஏராளமாக உள்ளது. உங்களுக்கு யாரிடமும் பைசா ஆகியவை பெறுவதற்கன விருப்பம் இல்லை. நீங்களோ கருணையுள்ளம் உடையவர் ஆக வேண்டும். கருணையுள்ளம் உடைய தந்தையின் குழந்தைகள் கூட கருணையுள்ளம் உடையவர்கள். யார் அநேகருக்கு வழி கூறுவார்களோ அவர்கள் பதவியும் உயர்ந்ததாக அடைவார்கள். கேட்பவர்களோ நிறைய பேர் கேட்கிறார்கள் அல்லவா? இங்கிருந்து சென்று விட்டார்களோ இல்லையோ மறந்து விடுகிறது. நம்பர் பிரகாரம் தாரணை செய்கிறார்கள். இதில் மிகவும் நல்ல உழைப்பு செய்ய வேண்டும். 21 பிறவிகளுக்கான இராஜ்ய பாக்கியம் கிடைக்கிறது. சாதாரண விஷயமா என்ன? காங்கிரஸ் ஜனங்கள் கூட கூறுவார்கள். தூங்குவது முறையற்றது என்று. தந்தையும் கூறுகிறார் உறக்கத்தை வென்றவர் ஆகுங்கள் இரவில் கூட சம்பாத்தியம் செய்யுங்கள் என்று.

யாராவது சரீரம் விட்டால் நாடகத்தில் அவருக்கு அவ்வளவு தான் பார்ட் இருந்தது என்று புரிந்து கொள்கிறோம். நெருங்கிய குழந்தைகளாக இருப்பவர்கள் வருகிறார்கள். ஒரு சிலரோ நிறைய கண்ணீர் வடிக்கிறார்கள் - பச்சாதாபப் படுகிறார்கள் - நாங்கள் சேவை செய்யவில்லை தந்தை கூறியதை ஏற்கவில்லை. இது போல வித விதமானவர்கள் இருக்கிறார்கள். பாபா சாட்சாத்காரம் செய்விக்கிறார். சேவை செய்து உங்களுக்கு சமமாக ஆக்குங்கள் என்று நான் உங்களுக்கு எவ்வளவு கூறிக் கொண்டிருந்தேன். நீங்கள் ஒன்றுமே செய்யவில்லை. பின் அழுகிறார்கள். தர்மராஜருக்கு முன்னாலும் அழுகிறார்கள். அடி வாங்குகிறார்கள். பரீட்சை முடிந்து விட்டது. ரிஸல்ட் வெளிவந்து விட்டது. பின் அழுவதால் ஏதாவது நன்மை ஆகுமா என்ன? இப்பொழுது அன்பிற்குரியவர்களை அழைத்து செல்ல அன்பர் வந்து விட்டுள்ளார். கூறுகிறார், வாருங்கள் பின் நான் உங்களை உலகத்தின் மஹாராணி ஆக்குகிறேன். யார் புருஷார்த்தம் செய்கிறார்களோ அவர்கள் ஆவார்கள் நட்சத்திரங்களில் கூட நம்பர் பிரகாரம் உள்ளன. ஒரு சிலதோ நிறைய

பிரகாசிக்கும். நீங்கள் புருஷார்த்தம் செய்து கொண்டிருக்கிறீர்கள். மேலே உங்களது கடைசி முடிவின் நினைவார்த்தம் உள்ளது. இப்பொழுதோ கிரகணம் பிடிக்கிறது அல்லவா? போகப்போக கிரகச்சாரம் அமைந்து விடுகிறது. அதனால் புயல்களிலிருந்து வெளியேற முடியாமல் ஆகி விடுகிறார்கள். கிரகணம் பிடித்ததோ இல்லையோ விழுந்து விடுகிறார்கள். நிறைய பேருக்கு கிரகணம் பிடிக்கிறது. கிரகச்சாரம் தாய் தந்தையைக் கூட மறக்க வைத்து விடுகிறது. யாருமே பரிபூரணமாக ஆகவில்லை. மாயை கூட மகாவீரனிடம் மகாவீரனாக ஆகி சண்டை போடுகிறது. நல்லது.

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுத்த குழந்தைகளுக்கு தாய் தந்தை பாப்தாதாவின் அன்பு நினைவுகள் மற்றும் குட்மார்னிங். ஆன்மீக குழந்தைகளுக்கு ஆன்மீக தந்தையின் வணக்கங்கள்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

(1) நிரந்தர யோகியாகி சேவை செய்ய வேண்டும். மனம், சொல் மற்றும் செயல் ஏதாவதொரு வகையில் சேவையில் அவசியம் பிஸியாக இருக்க வேண்டும்.

(2) இரவு விழித்து சம்பாத்தியம் செய்ய வேண்டும். உறக்கத்தை வென்றவர் ஆக வேண்டும். எப்பேர்ப்பட்ட நிலைமையிலும் முரளி அவசியம் படிக்க வேண்டும்.

வரதானம் : அல்பகால சன்ஸ்காரத்தை அநாதி சன்ஸ்காரமாக மாற்றக் கூடிய வரதானி, மகாதானி ஆகுக.

அல்பகால சன்ஸ்காரமானது விரும்பா விட்டாலும் வார்த்தை மற்றும் செயல் செய்வித்து விடுகிறது. அதனால் தான் என்னுடைய உள் உணர்வில் இல்லை, என்னுடைய இலட்சியம் கிடையாது, ஆனால் நடந்து விட்டது என்று கூறுகிறீர்கள். நான் கோபப்படவில்லை, ஆனால் நான் பேசும் விதம் சன்ஸ்காரம் இப்படி இருக்கிறது . ஆக இந்த அல்பகால சன்ஸ்காரத்தையும் உறுதி யானதாக ஆக்கிக் கொள்கிறீர்கள். இப்பொழுது இந்த சன்ஸ்காரங்களை அநாதி சன்ஸ்காரங்களாக மாற்றுங்கள். ஆத்மாவின் அநாதி ஒரிஜினல் சன்ஸ்காரம் - சதா சம்பன்னம், சதா வரதானி மற்றும் மகாதானி ஆகும்.

சுலோகன்: பிரச்சனை என்ற மலையை பறக்கும் கலையின் முயற்சியின் மூலம் கடந்து விடுவது தான் பறக்கும் யோகி ஆவதாகும்.